*வழக்காளிகளின் முறைப்பாட்டை விசாரணை செய்து எதிராளிகளை அவ்விடத்துக்கு இயந்திர வள்ளங்களோடு நுழையாதிருக்கும்படி உதவிப் பொலிஸ் ஆணையாளர் உத்தரவிட்டிருந்தார். அரசாங்க அதிபரும் ஒரு விசாரணையை நடாத்தி எதிராளிகளை அவ்விடத்துக்கு இயந்திர வள்ளங்களோடு நுழையாதிருக்கும்படி உத்தரவிட்டிருந்தார். இதிலிருந்து எதிராளிகள் இயந்திர வள்ளங்களைப் பாவிப்பதே வழக்காளிகளின் முக்கிய முறைப்பாடாகத் தெரிகிறது. இத்தகராற்றில் ஆராயப்படவேண்டிய முதலாவது விடயம் இதனாலும், மற்றும் நான் பின்பு கூறப்போகும் சில உண்மைகளாலும் மாறுபடக்கூடும். இந்தச் சாட்சி ஒரு மீன்பிடிச் சங்க அங்கத்தவரல்லர். அதனாலே, அவரிடம் வலைகள் ஒன்றேனுமில்லையென நினைக்கவேண்டும். எதிராளிகளிடம் இம்மாதிரியான புதியதும் பழையதுமான வலைகள் மாதகலில் மீன்பிடிப்பதற்காக வைத்திருப்பதை அவர் அமோதித்துள்ளார். இந்த மீன்பிடி காரைநகர் கரையோரத்தில் மாத்திரமே நடாத்தப்படுகிறது. ஆகையினாலே, இத்தகராறுள்ள இடத்தில் எதிராளிகள் இத்திகதிக்கு முன்னர் மீன் பிடிக்கும் தொழிலைச் செய்யாத விடத்து அவர்களிடம் இதே மாதிரியான பழையதும் புதியதுமான வலைகளை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை.*

*அடுத்த படியாக, சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அருணசலம் அவர்கள். சாட்சிக்காக அழைக்கப்பட்டார். உண்மையிலே அவர் எதிராளிகளின் சார்பில் அழைக்கப்பட்ட சாட்சியாவர். ஆனால், அவர் வேறு உத்தியோக சம்பந்தமாகச் செல்ல வேண்டியிருந்தமையால் அவரை நான் முன்னதாகக் அழைத்திருந்தேன். அவருடைய வாக்குமூலங்களின்படி அவர் பண்டத்தரிப்பு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராவர். இவ்வெல்லைக்குள் மாதகலும் அடங்கியுள்ளது. 1973.03.08 இல் மாதகலைச் சேர்ந்த செல்லக்கண்டுவும் அவருடைய சகாக்களும் பொலிசாரால் பிடிக்கப்பட்டு அவர்களை வழக்கமான மீன்பிடித் தொழிலைச் செய்ய விடாது தடுக்கப்பட்டிருப்பதாக ஒரு முறைப்பாடு செய்தார்களென்றும், அவர் ஊர்காவற்றுறைப் பொலிசாருடன் தொலைபேசி மூலம் இச்சம்பவம் பற்றி அரசாங்க அதிபரின் கவனத்துக்குப் போகும் வரைக்கும் தடுத்தல் செய்ய வேண்டாமெனக் கேட்டுக்கொண்டதாயும் தெரிவித்தார். அத்தோடு இதை ஊர்சிதம் செய்யும் வகையில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் ஸ்தாபன பொறுப்பாளருக்குக் கடித மூலம் தெரிவித்து, அதன் பிரதிகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தருக்கும் அனுப்பியிருந்தார். அக்கடிதத்தில் அவர்கள் பாரம்பரை மீனவர் எனக் கூறியுள்ளார்: பரம்பரையாக ஈரல் மீன்பிடிக்கும் மீனவர் எனக் குறிப்பிட்டதை அறிவதற்காக அவரிடம் காரணம் கேட்டேன், செல்லக்கண்டுவும் கடற்றொழில் பரிசோதகரும் தன்னிடம்*

அப்படிக் கூறியதாக அவர் கூறினர். அவருக்கு இதுபற்றி பரீட்சைய விளக்கம் இல்லை. ஆனால், யாழ்ப்பாணத்துக்கு வந்து சேருகின்ற மூரல் மீன்களில் அநேகமாக மாதகலில் இருந்தே வருவதாக அவரால் கூறமுடியும். இவர் கிராம சேவகரை விசாரித்து அவர்கள் பரம்பரையாக மூரல் மீன் பிடிப்பவர்கள் எனத்தெரிந்து கொண்டார். மாதகல் மீனவர் காரைநகர் உட்பட பிற இடங்களுக்கும் மீன்பிடிக்கப்போவதை இவர் அறிந்திருக்கிருர். இவருடைய விளக்கத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற மூரல் மீன்களெல்லாம் மாதகலில் இருந்து வருவது ஒன்றே முக்கிய அம்சமாக இருந்தது. மாதகலில் அதிகமான மூரல் மீன்பிடி இல்லாதிருந்தும் மாதகலிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மிகத் தொகையான மூரல் மீன்கள் அனுப்பப்படுவதாக இருந்தால், உண்மையில் அம்மீன்கள் மாதகல் மீனவரால் இத்தகராற்றுக்குரிய இடத்திலிருந்து பிடிக்கப்பட்டதாகவே இருக்கவேண்டும்.

அவருடைய விளக்கம் சந்தேகத்திற்கிடமானது. யாழ்ப்பாணத்தில் எதிராளிகளால் விற்கப்பட்ட மீன் காரைநகர் மீன் திடலிலிருந்து விலைக்கு வேண்டிவந்தவையாக இருக்கக்கூடும் என்றும் அதேபோல யாழ்ப்பாணத்தில் விற்கப்படும் மீன் எதிராளிகளால் காரைநகரின் தகராற்று மீன் திடலில் பிடிக்கப்பட்டவையாகவும் இருக்கக்கூடும் என்றும் இரு பொருள்படக் கூறினர். இக்கேள்வி உதவி அரசாங்க அதிபரை அவருடைய விளக்கத்தினன்று கேட்கப்படவில்லை. ஆனல், அடுத்த நாள் சாட்சியான தேவராசா அவர்கள் வழக்காளிகளால் எதிராளிகளுக்கு விற்பனை செய்த இம்மீன்கள் பற்றி மிகவும் புத்திசாதுரியமாக விளக்கம் கூறியிருந்தார் .ஆகையினுலே, இதுபற்றி முக்கிய கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. இவ்விற்பனவு பற்றி வழக்காளிகளின் மனத்திலே நினைவராக இருந்தபடியால் தேவராசா அவர்கள் இதுபற்றி மிகவும் ஆணித்தரமாகக் கூறியதோடுமல்லாமல், வழக்காளிகள் எதிராளிகளுக்கு மீன் விற்பதை நிற்பாட்டியமையே இத்தகராற்றின் காரணமாகும் என்றும் கூறினர். அவருடைய கூற்றின்படிக்கு, எதிராளிகள் குறிப்பிட்ட தினத்தில் இப்படி நடந்ததற்கு இதுவே காரணமாக இருக்கிறது. எதிராளிகள் மாதகலிலும் மூரல் மீன் பிடிப்பதாக அவர் கூறுகின்ற இவ்விற்பனவு பற்றி வழக்காளிகளின் மனத்திலே நினைவாக இருந்ருர். ஒரு சாட்சியின் கூற்றின் மட்டுமே மாதகலில் மூரல் மீன்பிடி சிறிதளவாக நடக்கும் என்று உண்மை வெளிப்பட்டமேயல்லாமல் வேறு இவ்வழக்கில் எவ்வித விளக்கங்களாலும், இந்த உண்மை சான்றுப்படுத்தப்படவில்லை. உதவி அரசாங்க அதிபரின் விளக்கம் இரு கருத்துப்படக் கூடியதாகவிருந்ததால், எதிராளிகள் அடுத்த சாட்சிகளின் விளக்கங்களால் உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. எதிராளிகளால் அழைக்கப்பட்ட சாட்சிகளின் விளக்கத்தின்படிக்கு அவருடைய விளக்கம் உறுதிப்படுத்தப்பட்டது. இதை நான் பின்பு விவரிக்கிறேன். ஆகையால், அவருடைய வாக்குமூலத்தைச் சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ளுகிறேன்.

காரைநகர் மீன்பிடிச் சங்கத்தின் தலைவராகிய தேவராசா அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தன்னிடம் வலைகள் இல்லையென்பதை ஒத்துக்கொண்டார். அவரிடம் கட்டுமரங்களுமில்லை. தேவ்ராசா அவர்கள் மூரல் மீன்பிடித் தொழில் செய்வதில்லையென்பதை, வழக்காளிகளால், அழைக்கப்பட்ட சாட்சியாகிய கந்தையா என்பவர் ஒத்துக்கொண்டார்.

வழக்காளிகளால் அழைக்கப்பட்ட 80 வயதுடைய வீரக்குட்டி இளையதம்பி என்பவரும், கந்தையா என்பவரும் வழக்காளிகளின் கூற்றையே திரும்பவும் கூறினர்கள், ஆனல் அவர்கள் உண்மையான சாட்சிகளாக எனக்குத் தோன்றவில்லை. காரைநகர் வடக்கின் கிராம சேவையாளர், சாட்சியாக அழைக்கப்பட்டார். பொய்யை எவ்வளவு தூரத்துக்குப் புனைந்துரைக்க முடியுமோ அவ்வளவு பொய்சாட்சியாகத் தெரியப்பட்டார். அவ்வூரிலிருந்து 700 மீன்வர் மீன்பிடிக்கச் செல்வதாகக் கூறினர்.. இக்கூற்றுக்கு முற்றிலும் மாருக வழக்காளிகளால் அழைக்கப்பட்ட அவர்களுடைய சொந்தச் சாட்சியாகிய தம்பிராசா சுவாமி அவர்கள், 200 ல் இருந்து 300 மீனவர் மட்டும் உண்மையாக மீன்பிடிக்கச் செல்வதாகவும் மிகுதியானவர்கள் வெவ்வேறு தொழில்கள் செய்வதாகவும் உறுதிப்படுத்திக் கூறினர். எதிராளிகள் 1973 ம் ஆண்டிலேயே அவ்விடம் மீன்பிடிக்க வந்ததாக அவர் உறுதிபடுத்திக் கூறினர். முதலாவது விடயத்துடன் ஒப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு அவர் வாக்குமூலமளித்தார். இவ்விடயமாகச் சாட்சி சொல்வதற்கு அவர் அழைக்கப்பட்டிருந்தும், அவரால் அவருடைய தினக்குறிப்புப் புத்தகத்தைக் கொண்டுவர முடியாமல் போய்விட்டது. அவருக்குகந்த முறையில் வாக்குமூலம் கொடுக்கமுடியுமாகையால் அவரிடம் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடு பற்றி மனத்தின் நினைவாலேயே வாக்குமூலமளிக்க முன்வந்தார். எதிராளிகள் 1973 ஆம் ஆண்டிலேயே முதன்முதலாக அவ்விடத்துக்கு மீன்பிடிக்க வந்தார்களென்றும் அதற்கு முன்பு மீன்பிடிக்க வரவில்லையென்றும் வழக்காளிகள் தமக்குக் கொடுத்த முறைப்பாட்டில் கூறியிருந்தார்களென்பதை உறுதியாகக் கூறினர். இது உண்மையாகவிருந்தால், முதலாவது விடயத்துக்கொப்ப, இவ்வாக்கு மூலம் மிகவும் பொருத்தமாகவிருக்கும். அவர் வாக்குமூலம் கொடுக்கும்பொழுது அவருடைய ஒழுக்கமுறையில் நான் சந்தேகம் கொண்டமையால், அடுத்த தவணைக்கு வரும்பொழுது அவருடைய்ய தினக்குறிப்பைக் கொண்டுவரும்படி ஆணையிட்டேன். அடுத்த நாள் சந்தேகப்பட்டதுபோல், இவ்விதமான முறைப்பாடுகள் குறிப்பிட்டிருக்கவில்லை. இச்சாட்சியானவர், ருசு இல்லாத வாக்குமூலத்தை நான் நம்பிவிடுவேன் என்னும் எண்ணத்துடன் வேண்டுமென்று பொய்வாக்குமூலமளித்துத் தப்பிவிடுவதற்கு எண்ணியிருந்தார். இச்சாட்சி எனக்கு முன்னல் பொய்ச் சாட்சி அளித்தார் என்று நான் ஏற்றுக்கொண்டு, கொஞ்சமேனும் சந்தேகமில்லாமல், இம்முக்கியமான விடயத்தின் பொருட்டு அவர் அளித்த வாக்குமூலத்தைத் தள்ளுபடி செய்தேன்.

வழக்காளிகளால் 1973.02.06 ல் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. இம்முறைப்பாட்டிலும் எதிராளிகள் 1975 ஆம் ஆண்டிலேயே முதன்முதலாக அவ்விடம் வந்தார்கள் எனக் கூறப்படவில்லை. இம்முறைப்பாட்டுக்கு முதலாவது விடயத்துக்கும் சம்பந்தமில்லை.

கோவில் குருக்களாகிய தம்பிராசா சுவாமி அவர்களும் வழக்காளிகளின் கூற்றேயே திரும்பவும் கூறினர். வழ்க்காளிகளின் நிலைக்கு உடந்தையாக இருப்பதற்காகவே இவரைத் தருவித்தார்களென நான் எண்ணுகிறேன். இவருடைய வாக்கு மூலத்தை நம்ப முடியுமென நான் எண்ணவில்லை.

ஊர்காவற்றுறை கிராம முன்னேற்ற உத்தியோகத்தராகிய வீ. மாரிமுத்து என்பவரும் இவ்வழக்கில் சாட்சியமளித்தார். அவருடைய் சொந்த இடம் காரைநகராகும். காரைநகர் மீனவரின் முக்கிய தொழில் மீன்பிடித் தொழிலாகும். அவருக்குத் தெரிந்தளவிற்கு மாதகல் மீனவர் 1973 ஆம் ஆண்டுக்கு முன் இத்தகராற்றுள்ள இடத்தில் மீன்பிடிக்கவில்லை. மாதகல் மீனவர் இதகராற்றுள்ள இடத்தில் மீன்பிடிப்பதற்கு 1973 ஆம் ஆண்டிலேயே முதன்முலாக வந்தார்கள். அவர் காரைநகரிலிருக்கும் கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர்களின் ஒரு அங்கத்தவராவார். அவருடைய விளக்கத்திலிருந்து, காரைநகர் மீனவர் இவ்விடத்தில் தனித்து மீன்பிடிக்க வழிசெய்து, இதன் பயனக இம்மீன்பிடிச் சங்கம் பெருமளவிற்கு பண வசதியடையும் பொருட்டு அவர்களின் உரிமைக்காகவே சாடுபவராக நான் எண்ணுகிறேன். நான் பின்பு கூறப்போகும் சிலருடைய வாக்குமூலங்களுக்கு மாறுபாடாக இவருடைய வாக்குமூலமிருப்பதால், இவ்வாக்குமூலத்தைத் தள்ளுபடி செய்யவேண்டும். ஆனலும், இக்கடற் பரப்பில் அதிகமாக மீனவர் மீன்பிடித்தற்கு அனுமதியளித்தால், அதிக மீன்கள் பிடிபடலாமென்றும், நாட்டின் நலனுக்காகவும், நாட்டுக்கு அதிக மீன்பிடியில் நன்மை பயக்கும் என்னும் அரசாங்கத்தின் நோக்கமும் நிறைவேறுமென ஒத்துக்கொண்டார்.

ஊர்காவற்றுறை கடற்ருெழில் பரிசோதகர் (கூட்டுறவு அபிவிருத்தி) எல். பி. பிலிப் அவர்கள் சாட்சியாக அழைக்கப்பட்டார். இம்மீன்பிடி இடம் அவருக்குத் தெரிந்திருக்கவில்லையாதலால் அவரால் முதலாவது விடயத்துக்கான் வாக்குமூலம் அளிக்க முடியவில்லை. அப்படியிருந்தும் அவருடைய விளக்கத்திலிருந்து, வெளியிணை மோட்டாரின் பாவிப்பால் காரைநகர் மீனவரின் வலைகள் சேதப்படுத்தப்பட்டன எனச் செய்திருந்த முறைப்பாடு தெரியவந்தது. எப்படியாகிலும், இவ்வழக்கில் எழுப்பப்பட்ட விடயங்களில் ஒன்றுக்காகுதல் இவ்விளக்கம் சார்ந்திருக்கவில்லை, தலைவரால் செய்யப்பட்ட முறைப்பாட்டை, சங்கத்தின் அறிக்கைகள் எழுதும் புத்தகத்தை எடுப்பித்து, இப்புத்தகத்தில் பதிந்ததான ஒரு கருத்தைவெளியிட்டார். இம்முறைப்பாடு சாமான்யமாக வலைகள் சேதப்பட்டனவையே குறிப்பிடுகிறது. தலைவர், இம்முறைப்பாட்டில், மாதகல் மீனவர் 1973 ஆம் ஆண்டு இவ்விடத்தில் முதன்முதலாக மீன்பிடிக்க முயன்ருர்களென்ருே, அல்லது இவ்விடத்தில் மீன்பிடிப்பதற்குத் தங்களுக்கு மாத்திரம் உரிமை இருப்பதாகவோ கூறவில்லை. முதலாவது விடயத்தை ருசுப்படுத்துவதற்குத் தேவைப்பட்ட உண்மைகள் கடற்ருெழில் பரிசோதகரின் (கூட்டுறவு அபிவிருத்தி) வாக்குமூலத்தால் பொய்யைத் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. நான் முன்பு கூறியதுபோல, இவ்வழக்கில் முதலாவது விடயம் மிகவும் முக்கியமானதாக இருப்பதால், தலைவர்கள், அவருடைய முறைப்பாட்டில் அதிமுக்கியமான இவ்வுண்மையைக் கூருமலும், அறிக்கைப் புத்தகத்தில் பதிவு வைக்காமலும் இருக்கமுடியாது.

சதாசிவம் வாக்குமூலமளித்தார். அவருடைய வாக்குமூலம் முதலாவது விடயத்தையே திரும்பவும் கூறுவதாக இருந்தது. அவரும் கிராம சேவையாளரின் வாக்குமூலத்துக்கு முரண்பாடாக, கிட்டத்தட்ட 300 ஆட்களே மூரல் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தார்கள் எனக் கூறினர். முன்பு விளங்கிய சாட்சி, சாட்சியம் கூறும்பொழுது இந் நீதிமன்றத்தில் நடந்தவையெல்லாம் இவருக்கு நன்ருகத் தெரிந்திருந்தது. காரைநகர் கிராம சேவையாளரால், முறையே 1973.02.07, 73.02.26, 73.03.03, 73.03.13, 73.03.15 ஆம் திகதிகளிலிட்ட முறைப்பாடுகளின் எண்கள் 2, 3, 4, 5, 6 ஆகியனவை சமர்ப்பிக்கப்பட்டன. இம்முறைப்பாடுகள் ஒன்றிலாகுதல், மாதகல் மீனவர் 1973 ஆம் ஆண்டிலேயே முதன்முதலாக இக்கடல் நீரில் மீன்பிடிக்க வந்தார்கள் என்று கூறப்படவில்லை. இவ்வழக்கில் முதலாவது விடயம் மிகவும் முக்கியமானதும் கவனத்துக்குரியதுமான விடயமாகும். இவ்வுண்மையைக் கூருதிருந்ததிலிருந்து இவ்விடய்

மானது இவ்விசாரணைக்காகவே தொடக்கத்திலில்லாமல் பின்பு கொண்டு வரப்பட்டதுபோலத் தெளிவாகத் தெரிகிறது.

எதிராளிகள் மாதகல் கிராம சேவையாளரை அழைத்தார்கள். மாதகல் கடற்றொழில் சங்கத்தில் 400 அங்கத்தவர்களும் அவர்களால் 100 கட்டுமரங்கள் பாவிக்கப்பட்டன. அவர் மாதகலில் 1962 ஆம் ஆண்டு ஒரு வருடம் கிராம சேவையாளராகவிருந்தார். 1963 ஆம் ஆண்டு 6 மைல் தூரந்தள்ளி வட்டுக்கோட்டைக்குக் கிராம சேவையாளராகச் சென்றார். 1966 ஆம் ஆண்டு 2 மைல் தூரம் தள்ளி பண்டத்தரிப்புக்குக் கிராம சேவையாளராகச் சென்றார். 1969 ஆம் ஆண்டு 7 மைல்கள் தள்ளி அராலிக்கும், 1972 ஆம் திரும்பவும் மாதகலுக்கும் வந்து சேர்ந்தார். மீன்பிடிக்குமிடம் பற்றி அவருக்கு நிதானமாகத் தெரியாது. எங்ஙனமாயினும், மாதகல் கரையோரத்திலிருந்து மரக்கலங்கள் போவதும் வரும்பொழுதும் மூரல் மீன்கள் நிரம்பக் கொண்டுவருவதும் தெரிந்திருந்தது. மூரல் மீன்கள் பிடிபடும் எல்லையையுடைய இடமே தகராற்றுக்குரிய இடமாகவிருந்தது. மரக்கலங்கள் கோவளம் பக்கமாகப் போவதும் வரும்பொழுதும் நிறைய மீனுடன் வருவதைப் பார்த்தாகக் கூறிய வாக்குமூலத்திலிருந்து இம்மரக்ககலங்கள் கோவளப் பக்கமாகப் போய், திரும்பி வரும்பொழுது தகராற்றுக்குரிய மீன்பிடித் திடலிலிருந்து வருவதாக எவரும் தடுக்கமுடியாத முடிவாக எண்ணலாம். கோவளத்தின் மீன்பிடித் திடலிலிருந்து மீன்கள் கொண்டு வருவது அவருக்குத் தெரியும். 1962 ஆம் ஆண்டு அவர் இதைக் கவனித்திருக்கிறார். அவர் உண்மை கூறுவதாக நான் திடமாக நம்பிக்கொண்டேன். இரவு 10.00 மணிக்கு மீன் விலைக்கு வேண்டியதாகக் கூறியதாலும் சாட்சிக்காரர் செல்லத்துரை கூறிய சாட்சிக்கும் இவருடைய சாட்சியத்துக்கும் முரண்பாடு இருந்தமையாலும், இவருடைய சாட்சியத்தைத் தள்ளுபடி செய்யும்படி வழக்காளிகளின் அப்புக்காத்து என்னைக் கேட்டுக்கொண்டார்.

இவ்வேளையில் வள்ளங்கள் புறப்படும் நேரம் குறித்தும் அவைகள் திரும்பி வரும் நேரம் குறித்தும் கூறிய சாட்சியங்களின் முரண்பாடுகள் பற்றி அப்புக்காத்து அவர்கள் விளக்கியவை என்னுடைய கவனத்துக்கு எடுக்கக்கூடியதாகவிருந்தது. இம்மாற்றங்கள் பற்றி எதிராளிகளின் வழக்கின் கூற்றுக்கு பங்கம் ஏற்படுவதாக நினைக்கவில்லை. எதிராளிகளால் செல்லத்துரை அழைக்கப்பட்டார். அவர் மீனவர்; அவர் கட்டுமரமூலம் மரல் மீன்பிடிப்பும் ஆமை மீன்பிடிப்பும் செய்துகொண்டிருந்தார். அவர் மாதகலிலும் சிலாவத்துறையிலும் மீன் பிடிப்பவர். அவர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச்சு மாதங்களில் கோவளி முனையில் மூரல் மீன் பிடிப்பவர் (தகராற்றுக்குரிய இடம்). மற்றைய காலங்களில் மாதகலிலும் சிலாவத்துறையிலும் மீன்பிடிப்பவராகவிருந்தார். அவர் 15 வருடகாலமாக மீனவராக இருந்தார். அவருடைய 15 வது வயது தொடக்கம் தகராற்றுக்குரிய இடத்தில் மூரல் மீன்பிடிப்பதற்காகச் சென்றிருக்கிறார். 8 அல்லது 9 ஆண்டுகளாகப் பாயுடைய கட்டுமரங்களுக்கு வெளியிணை மோட்டார்களும் பூட்டிப் பாவித்துள்ளார்கள். இயந்திரம் பூட்டிய மரக்கலங்களில் மீன்கள் அதிகமாகப் பிடிபடுகின்றன. அவைகள் மீன்களையோ அல்லது மீன்பிடிக்கும் மற்றவர்களையோ குழப்பமடையச் செய்வதில்லை. மோட்டார்களின் முன்னோட்டிக் கருவிகள் வேலைசெய்வதால் வலைகள் சேதமடைவதில்லை. இயந்திரக் கட்டு மரங்கள், வலைகள் இருக்குமிடங்களை அடையும் பொழுது, அவ்வியந்திரங்களை இயக்குபவர்கள், கடடுமரங்கள் வலைகளைக் கடந்து செல்லும் வரையில் வெளியிணை மோட்டார்களை மேலே உயர்த்திக் கொள்வார்கள். மீன் கூட்டங்களின் இருப்பிடத்தை அடைந்ததும் இயந்திரத்தை நிற்பாட்டி அவ்விடங்களுக்கு வலித்துக்கொண்டு செல்வார்கள். 50 தொடக்கம் 100 யார் தூர இடைவெளியில் இயந்திரம் நிற்பாட்டப்படும்.

மீன்பிடிக்கும் முறைகள் பற்றி விளக்கமாக அவர் கூறினார். மீன் கூட்டங்களை அணுகும்பொழுது மீனவரின் சப்தங்கள் பற்றிக் கூறினார். சப்தங்கள் செய்யும் பழக்கமூலம் மீன்கள் வலைகளுள் சென்றடையும் என்னும் நம்பிக்கையை மீனவர் கொண்டுள்ளார்கள் எனத் தெரிகிறது. மீனவர்களிடையே ஆதிகாலம் தொட்டு சில பழக்கவழக்கங்கள் தொன்றுதொட்டு இருந்து வருவதாயும் அவை இப்பொழுதும் பழகத்திலிருப்பதை நாம் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். கலாநிதி பி. கனகரத்தினம், ஆராய்ச்சி உத்தியோகத்தர் அவர்களின் கூற்றிலிருந்து, சப்தங்களால் மீன்பிடிக்கு ஒருவிதமான உதவியுமில்லையென்றும், சிலர் பழக்கவழக்கத்தினாலேயே சப்தம் செய்கிறார்களென்பதும் வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது. முதலாவது அடிப்படையாக, நீருக்கு மேலே செய்யும் சப்தத்தை நீருக்குள்ளிருக்கும் மீன்கள் அறியக் கூடியதாயிருக்க முடியாது. இயந்திர வள்ளங்களால் ஏற்பட்ட சப்தத்தை அடியோடு அற்றுப்போகுமாறு செய்வதற்காகவே இச்சப்தங்கள் தேவைப்படுகின்றன. கலாநிதி கனகரத்தினம் அவர்களின் வாக்குமூலத்தைப் பின்பு கூறுபடுத்தும்பொழுது இதைப்பற்றிக் கூறுகிறேன்.

மீன் கூட்டங்கள் தென்படும்பொழுதும் அவ்விடத்துக்குக் கட்டமரங்கள் வலித்தல் மூலம் சென்றடைகின்றன. அந்நேரங்களில் வெளியிணை மோட்டார்கள் இயங்காது நிறுத்தப்பட்டிருக்கின்றன. திரும்பி வரும்பொழுது, கடலின் வலைகள் இன்னும் இருக்கக்கூடுமாகையால், வெளியிணை மோட்டார்கள் நாசவேலை செய்வதற்குத் தருணங்கள் கிடைக்கக்கூடும். ஆனால், சாட்சிகளின் வாக்குமூலங்களின்படிக்கு, வலைகள் முழுவதும் உடுத்துமுடியும் வரைக்கும் வெளியிணை மோட்டார் கலங்கள் தாமதித்தே புறப்படுகின்றன.

அவர் மீனவரல்லாரென்றும் அவர் ஒரு மீன் முதலாளியென்றும் அவருடைய வாக்குமூலம் எதிர்க்கப்பட்டது. அவருடைய வாக்குமூலத்துக்கும் மற்றவர்களின் வாக்குமூலத்துக்கும் நேரகாலம் குறித்து மாறுபாடுகள் இருந்தும் இவைபோன்ற சிறுசிறு மாறுபாடுகளால் அவருடைய வாக்குமூலம் தேவையற்றதாகாது எனக் கூறியுள்ளேன். இவர் மூரல் மீன் பிடிப்பதை வண. பிதா. யோசப் அவர்கள் காணவில்லை. 1969 ஆம் ஆண்டிலிருந்து 1973 ஆம் ஆண்டு வரைக்கும் நடந்தவற்றையே வண. பிதா. யோசப் தெரிந்திருந்தார். இச்சாட்சி மீன்பிடிப்பதைத் வண. பிதா. யோசப் அவர்களால் பார்க்கமுடியாமல் இருந்திருக்கக்கூடும். இதனாலேயே இச்சாட்சியின் வாக்குமூலம் பொய்யானதென்று எடுத்துக் கொள்ள முடியாது. அவர் ஒரு உண்மையான மீனவரென்றும், கடந்த சில காலமாக மீன்பிடிப்பதிலும் பார்க்க மீன் வியாபாரத்தில் நாட்களைக் கடத்தியவராக எனக்குத் தோன்றினார்.

மாதகல் கோவிற்பற்றுப் போதகராகிய வண. பிதா லூயிஸ் யோசப் அவர்கள் வாக்குமூலமளித்தார்கள். அவர் 1968 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் கோவிற்பற்றுப் போதகராகவிருந்தார். அவர் மீனவரோடு கோவள முனையிலிருக்கும் மீன்பிடித் திடலுக்கு அவ்விடத்தைப் பார்ப்பதற்காக உண்மையாகச் சென்றுள்ளார். 1969 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதக் கடைசியிலேயே சென்றிருந்தார். மாதகலைச் சார்ந்த கிழக்குத் திசைக் கடலில் ½ தொடக்கம் 1 மைல் தூரமளவில் வழக்கமாக மூரல் மீன்பிடிப்பவர்கள் சிலர் இருந்தார்கள். அதில் 10 மீனவர் மாத்திரம் 5 அல்லது 6 கட்டுமரங்களின் உதவியுடன் இத்தொழிலைச் செய்தார்கள். இவ்விடத்தில் கிழக்குத் திசை என்பது கோவளம் கரைக்கு எதிர் புறமான திசையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூடுதலான மீனவர் 26 இலிருந்து 38 கட்டு மரங்களில் காரைநகர்ப் பக்கம் சென்றார்கள். 1969 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அவர் கோவள முனைக்கு மீனவருடன் சென்றிருந்தார். மீன்திடலுக்குக் கிட்டத்தட்ட 100 யாருக்கு அப்பால் போயிருந்தும், எவ்வகையில் மீன்பிடி நடப்பதென்பதுபற்ற வாக்குமூலம் கொடுத்துக்கொண்டிருந்தார். இவர், பிரகலமாகத் தொலிக்க சமூகத்தின் கோவிற்பற்றுப் போதகரென்றும், அதே குலத்தைச் சேர்ந்தவரென்பதால் அவர்களின் நலனுக்காகச் சாட்சிக்கு வந்தாரென்றும், பொலிசார் இத்தகராற்றில் ஈடுபட்டவர்களை தடுப்புக் காவலில் வைத்திருக்கும் பொழுது இத்தகராற்றில் முக்கிய தொடர்புடையவராயிருந்தவரென்றும், ஆகையினால் மாதகல் மீனவரின் நலனுக்காக வசப்பட்டவர் என்னும் காரணங்களைக் காட்டி வழக்குரைஞரின் எழுத்துமூல உரையின்போது அவருடைய வாக்குமூலத்தை எதிர்த்தார்கள். அவருடைய ஆணைக்குட்பட்டு இருப்பவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்பொழுது முக்கிய தொடர்புகொள்வது இயற்கையென்றே நான் கூறுவேன். நான் இச்சாட்சியை என் முன்னிலையில் பார்த்திருக்கிறேன். இச்சாட்சி உண்மை கூறுகிறாரென்பதை எவ்விதத்தாலும் நான் ஐயப்படவில்லை. இச்சாட்சியானவர் அதே குலத்தைச் சேர்ந்தவரென்பதாலும், அவ்வூருக்குக் கோவிற்பற்றுப் போதகராகவிருப்பதாலும், அவர் பொய் வாக்குமூலம் கொடுக்க முன்வந்திருப்பதாகக் கூறிய அப்புக்காத்தின் கூற்றை ஆமோதிக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சாதியிலும் கத்தோலிக்கர்கள் இருக்கிறபடியால் இச்சாட்சியானவர் (நான் முன்பு உண்மை கூறும் சாட்சியெனக் கூறியது) குறிப்பிட்ட ஒரு சாதியினரின் பக்கம் சாருவார் என்று கூறிய கூற்றை நான் எடுத்துக்கொள்ள முடியாது. ஒருவிதமான சந்தேகமுமில்லாமல் நம்பிக்கொண்ட அவருடைய வாக்குமூலத்திலிருந்து 1973 ஆம் ஆண்டுக்கு முன்னர் மாதகல் மீனவர் கோவளக் கரையில் மீன்பிடித்தார்கள் என்று தெளிவாகத் தெரிகிறது.

ஊர்காவற்றுறை கடற்றொழில் பரிசோதகர் திரு. ஆர். பிரான்சிஸ் வேர்கள் வாக்குமூலமளித்தார். 1970 ஆம் ஆண்டு ஜனவரி வாதம் 6 ம் திகதி ஊர்காவற்றுறை கடற்றொழில் பரிசோதகராக நியமிக்கப்பட்டார். காரைநகர் மீனவரை விட மற்றும் எழுவைதீவு, மாதகல் போன்ற இடங்களிலிருந்தும் மீனவர் மூரல் மீன் பிடிப்பதற்காக இவ்விடத்துக்கு வருவார்கள். 1970 ஆம் ஆண்டு தொடக்கம் எழுவைதீவிலிருந்து 6, 7 கட்டுமரங்களில் மூரல் மீன் பிடிப்பதற்காக வந்தார்கள். ஒன்று, இரண்டு இயந்திரம் பூட்டப்பட்டும் மற்றவை பாய்மரங்கள் பாவித்திருந்தன. 1973 ஆம் ஆண்டு எழுவைதீவிலிருந்து வரும் இயந்திரம் பூட்டிய கட்டுமரங்களின் எண்ணிக்கையில் 2 கூடவிருந்தது. 1970 ஆம் ஆண்டு மாதகலி

லிருந்து ஒன்று இரண்டு இயந்திரக் கட்டுமரங்களும் சுமாராகப் 15 இயந்திரம் பூட்டப்படாத கட்டுமரங்களும் மூரல், மீன்பிடிப்ப தற்காக வந்திருந்தன. 1971 ஆம் ஆண்டு இயந்திரம் பூட்டப் பட்ட கட்டுமரங்களில் ஒன்று இரண்டு கூடியும் 1972 ஆம் ஆண்டு அவை 10 ஆகவும் அதிகரித்தன. 1973 ஆம் ஆண்டு இயந்திரம் பூட்டப்பட்ட கட்டுமரங்களின் தொகை 25 அல்லது அதற்கு மேலாகவும் அதிகரித்திருந்தன. 1970 ஆம் ஆண்டு தொடக்கம் 1973 ஆம் ஆண்டு வரைக்கும் இத்தகராறுக்குரிய இடத்தில் வெளி யிணை மோட்டார்கள் பூட்டப்பட்ட கட்டுமரங்கள் மீன்பிடிப்பதற் காகப் பாவிக்கப்படுவதைக் கண்டிருக்கிறார். அவர் இன்னும் கடற்றொழில் திணைக்களத்தைச் சேர்ந்த பரிசோதகராகவிருக் கிறார்.

இம்மாதிரியான விளக்கங்களுக்கு எல்லா கடற்றொழிற் பரிசோதகர்களேயும் மற்றும் தகராறுகளுக்குத் தேவையான உத்தியோகத்தர்களேயும், கட்டளைகள் மூலம் அழைப்பது திணைக் களத்தின் வழக்கமாகும். சில காரைநகர் மீனவரால் அவருக்கெதி ராகச் செய்திருந்த முறைப்பாடுகளில் அவர் பொய் வார்த்தை கூறுவதாகக் குற்றம் சாட்டப்பட்டார். அநேக மீனவர் இருக்கு மிடத்தில் சில மீனவரால் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்காக ஒரு அலுவலகச் சாட்சிக்கு உணரக்கூடிய பொய் வாக்குமூலத்தை அளிக்கும் வாய்ப்பு இருக்குமென நான் எண்ணுவதற்கில்லை அரசாங்க உத்தியோகத்தர்களுக்கெதிராக முறைப்பாடுகள் செய்வது சாதாரணமான விஷயம். இச்சந்தர்ப்பத்தில் முறைப் பாடு ருசுப்படுத்தப்படவில்லை. மகாநாட்டின்பொழுது அவர் பிர சன்னமாகவிருந்தும் வாக்குமூலமளிக்கவில்லையென நியாயவாதி அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது. மாநாட்டின்பொழுது அவர் பிரசன்னமாகவிருந்தது உண்மையென்றாலும், அரசாங்க அதிபரால் அவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டாலொழிய அவரால் வாக்குமூலமளிக்கமுடியாது. அரசாங்க அதிபரால் அவரிடம் கேள்வி கேட்கப்பட்டு, அவர் இந்த வாக்குமூலம் அளிக்காதிருந் திருந்தால், நிலைமை உண்மையாக வேறு மாதிரியிருக்கும். நான் உண்மையில் அவருடைய வாக்குமூலத்தை நம்புகிறேன். இவ் வழக்கின் தீர்ப்பானது இந்தச் சாட்சியின் வாக்குமூலத்தில் மாத்திரம் தங்கியிருக்குமாயின், இச்சாட்சியின் வாக்குமூலத்தி லிருந்துதான் தீர்ப்பை வழங்குவேன் என்பது திட்டம். எதி ராளிகளின் சாட்சிப் பட்டியலில், அவருடைய பெயர் இருந்தும், எதிராளிகளால் அழைக்கப்படவில்லை. ஆனால் திணைக்களத்தார் அழைக்கப்பட்டிருந்தார். இது மிகவும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய விஷயமாகும்.

மாதகல் கடற்றொழில் பரிசோதகர் திரு. ஏ. பிரான்சிஸ் அவர் களும் வாக்குமூலமளித்தார். அவர் வழக்காளிகளாலோ அல்லது எதிராளிகளாலோ அழைக்கப்படாது வழக்கம்போல திணைக்களத் தினால் அழைக்கப்பட்ட உத்தியோக சாட்சியாகும். 1971 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்விடத்திற்குப் பொறுப்பாளராக இருந் திருக்கிறார். மாதகல் மீனவர் கோவளத்தை நோக்கிப் போவதை யும், பிடித்த் மூரல் மீன்களோடு திரும்பி வருவதையும் பார்த் திருக்கிறார். நான் முன்பு மாதகல் கிராமசேவையாளருக்குக் கூறிய அபிப்பிராயம் போலவே இவருடைய நிலைக்கும் கூறலாம்.

இவ்விடத்தில் மூரல் மீன் பிடிக்கக்கூடிய வேறு மீன் திடல்கள் இல்லை. இவ்விடத்து மீனவர் 1971 ஆம் ஆண்டு தொடக்கம் கோவ ளத்தை நோக்கிப் போவதும், மூரல் மீன்களோடு திரும்பி வருவ தும், அம்மீன்கள் கோவளத்தில் பிடிக்கப்பட்டவை எனத் தெரி விக்கப்பட்டவையுமே அவருக்குத் தெரிந்திருந்த உத்தியோகப் பூர்வமான அறிக்கையாகும். இவ்விசாரணையிலிருந்து இச் செய்கை 1964 ஆம் ஆண்டிலிருந்து நடைபெறுகிறது.

இம்மாதிரியான விசாரணைகளில் வாக்குமூலங்கள் எடுக்க வேண்டிய மாதிரி நிபந்தனைகள் வழக்கமாகப் பின்பற்றப்படுவ தில்லை. வள்ளங்கள் கோவளம் நோக்கிப் போவதையும், கோவ ளத்திலிருந்து திரும்பி வருவதையும், மீனவரிடமிருந்தும், அவ் வூர்களிடமிருந்தும் விசாரணைகள் மூலம் தகராற்றுக்குரிய இடத் தில் மீன்பிடித்ததாகவும் அறிந்திருந்தார்கள். இப்படியான உத்தி யோக பூர்வமான சில சாட்சிகளின் வாக்குமூலங்களைக் கேட்ப தற்காகவே விசாரணை செய்யவேண்டியிருந்தும் என்னால் அவை களை நம்பக்கூடியதாகவிருக்கிறது.

எழுவை தீவிலிருந்து ஒரு மீனவரான அந்தோனிமுத்து இராசையா என்பவர் வாக்குமூலமளித்தார். இவ்விடத்தில் காரை நகர் மீனவர் மாத்திரம் மீன்பிடித்தார்கள் எனக்கூறிய வழக்காளி களின் கூற்றுக்கு எதிரான வாக்குமூலத்தை அளித்தார். அவரு டைய வாக்குமூலம் இவ்விடத்துக்குரிய கடற்றொழில் பரிசோத கரின் வாக்குமூலத்தை ஒத்திருந்தமையால் அவருடைய வாக்கு மூலத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். செல்லக்கண்டுவுடைய வாக்குமூலம் எதிராளிகளின் வாக்குமூலத்தை ஒத்திருந்தது. அவர் ஒரு உண்மை பேசும் சாட்சிபோலத் தோன்றுகிறது. நியாயவாதி அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட நேரம், இடம் போன்றவற்றில் சில மாறுதல்கள் இருந்தும், நான் அவருடைய சாட்சியத்தையும் ஏற்றுக்கொள்கிறேன்.

1974.06.15 ல் நான் இவ்விடத்தைப் பார்வையிட்டேன். மீன் பிடித் திடலைப்பற்றி சில தடுமாற்றங்கள் ஏற்பட்டிருந்தும், பின்பு பிரிவுகாரர்களால் அவைகள் புலப்படுத்தப்பட்டன. இவ்விடத்தில் ஏ. எம். அம்பலவாணர் என்பவர் பிரசன்னமாயிருந்தார். 1948 ஆம் ஆண்டு தொடக்கம் அவர் காரைநகர் கிராம சபைத் தலைவ ரென அறிமுகம் செய்தார். அவர் இத்தகராற்றுக்குரிய காரணங் கள் முழுவதும் தெரிந்திருந்தார். என் முன்பு வார்த்தைகள் கூறுவதற்காக வந்திருந்த கூட்டத்தவர்களுக்கு அவர் அவ்விடத் தில் தலைமைதாங்கியிருந்தார். 1948 ஆம் ஆண்டு தொடக்கம் கிராமச் சபைத் தலைவராக இருந்தும்; வழக்காளிகளால் இவரைச் சாட்சிக்கழைக்காமலிருந்தது ஆச்சரியத்துக்குரிய விடயமாகும். வழக்காளிகள் சில மீனவரைச் சாட்சிக்கு அழைத்ததோடு திருப்தியடைந்திருந்தார்கள். சாட்சி கூறுவதற்கும் குறுக்குக் கேள்விகளுக்கும் தயாராகவிருக்கும் கிராமச் சபைத் தலைவர் ஏ. எம். அம்பலவாணர் போன்ற ஒருவர் அவர்களுக்குச் சாட்சியாக இருப்பாராகவிருந்தால், அவர்கள் உண்மையிலேயே இச்சாட்சியை அழைத்திருக்கக்கூடும்.

கடற்றொழில் ஆராய்ச்சிப் பகுதியின் ஆராய்ச்சி உத்தியோகத்த ரான கலாநிதி பி. கனகரத்தினம் அவர்கள் நிபுணர் என்ற முறை யில் சாட்சி சொல்வதற்காக என்னால் அழைக்கப்பட்டார். அவர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விலங்கினவியலில் கௌரவம் பெற்ற பட்டதாரியாகவும், பிரித்தானிய கொலம்பியா, கனடா ஆகிய பல்கலைக்கழகங்களில் விலங்கினவியலிலும் கடற்றொழில் இரசாயனத்திலும் எம்.எஸ்.சி. பிஎச்.டி. பட்டம் பெற்றவருமாவர். அவருடைய கூற்றின்படிக்கு சவளிலிருந்தோ அல்லது மோட்டாரி லிருந்தோ வரும் சப்தமானது கீழ்நோக்கிச் செல்லக்கூடியதாகும். அதாவது சுற்றுப்புறமாக வியாபித்தலாகும். இச்சப்தத்தின் வேக மானது போகப்போகக் குறைந்துகொண்டே போகும். அதாவது, சப்தம் தொடங்கிய இடத்திலிருந்து 10 அடி தூரம் சென்றதும்

அதனுடைய வேகமானது $\frac{1}{10 \times 10} = \frac{1}{100}$ ஆகக்குறைந்தும்,

மேலும் இச்சப்தமானது இன்னும் 10 அடி தூரம் சென்றதும் அத

னுடைய வேகம் $\frac{1}{100 \times 100} = \frac{1}{10,000}$ ஆகக்குறைந்தும் இருப்

பதை டெசிபிள்ஸ் அல்லது ஹேட்ஸ் என்னும் சப்தமளக்கும் கருவியால் அளக்கலாம் (ஒரு விநாடிக்கு ஒரு சுற்று, ஒரு ஹேட்ஸ் லுக்குச் சமமாகும்). இங்கு வெளியிணை மோட்டார்கள் சம்பந்த மாக அவைகளால் எழுப்பப்படும் சப்தத்தின் வேகம்பற்றி அவ ருக்குத் தெரிந்திருக்கவில்லை. எப்படியிருந்தாலும், சப்தம் ஒழிந்த வுடன் மீன்கள் திரும்பவும் அவ்விடத்திற்கு வருகின்றன. இவ் வழக்கின் சாட்சியங்களின்படிக்கு, மீன்கள் தெரியும் இடத்துக்கு 50 இல் இருந்து 100 யாருக்கு அப்பால் வெளியிணை மோட்டார்கள் நிற்பாட்டப்படுவதுடன், இந்நிற்பாட்டும் செய்கையானது மீன் பிடிப்பதற்கு அதிக நேரத்துக்கு முன்னரேயே செய்யப்படுகிறது. என்னால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிபுணரின் வாக்குமூலத்தி லிருந்து, வெளியிணை மோட்டார்களினால் எழுப்பப்பட்ட சப்தத்தி னால் மீன்பிடித் திடலிலிருக்கும் மீன்கள் கலவரமடையும் என்னும் கூற்றை நம்பமுடியாது.

இவ்விடத்தில் வரையறுத்தலின்றி மீன்பிடிப்பதற்கு உத்தரவு கொடுத்தால், மீன்கள் முற்றாக ஒழிந்து போகக்கூடிய வாய்ப்பு ஏற்படலாமென்பதை நான் தீர்க்காலோசனை செய்யவேண்டும். நிபுணரின் வாக்குமூலத்திலிருந்து மீன்களின் உற்பத்தி மிகவும் கூடுதலானதென வெளிப்படையாகத் தெரிகிறது. முக்கியமாகப் பெலாஜிக் மீன்களே—பெலாஜிக் மீன்கள் கடல் அடிமட்டத்தில் இல் லாது, சிறிது மேலிருந்து கடல்பரப்பு வரைக்கும் காணப்படும் மீன்களாகும். மூரல் மீனும் பெலாஜிக் மீனேதான். உதாரணமாக, ஒரு சோடி மீனனது குஞ்சுகளைப் பொரிக்குமிடத்து அக்குஞ்சுக ளில் இரண்டு மட்டும் உயிரோடு பெரிதாக வளருமாகின், அவ் வளவே மீன்பிடிப்பதற்கு மிகவும் போதுமானது. கடலில் சாதா ரணமான மரணங்களில் மீன்களின் மரணம் சிறிதளவேயாகும்.

இயந்திர வள்ளங்களையிட்டு எழுந்த பிரச்சனையில், மீன்பிடித் திடலுக்கு வெகு விரைவாகப் போவதற்கும், பிடித்த மீன்களைக் கரைக்குக் கொண்டு வரும்பொழுது அவை பழுதுபடாமல் நல்ல நிலையிருப்பதற்காக, கூடிய விரைவில் வருவதற்குமேயாகும். மூரல் மீன்பிடியானது இலங்கையின் கரையோர மீன்பிடிக்கே உரித்தா னது. கட்டுமரங்கள் இயந்திரமயமாக்கப்படுவதை உற்சாகப் படுத்த வேண்டுமா என்று அவரிடம் குறிப்பாகக் கேட்கப்பட்ட கேள்விக்கு இது கட்டாயம் செய்யவேண்டும் என்றும் இயந்திர மயமாக்குவதற்கு உற்சாகமூட்டுவதே திணைக்களத்தினதும் அமைச்சினதும் நோக்கமெனவும் கூறினர். இவ்விடத்தில் இயந் திரக் கலன்களைப் பாவிப்பதால் மீன்களின் தொகை குறைவு பட்டோ அல்லது ஒழித்துவிடுவதோ இல்லை.

### முடிவு

வழக்கமாக இம்மாதிரியான தகராறுகள் சம்பவிக்கும் தன்மைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதன் மூலம் தீர்க்கப்படுகிறது. எங்ஙனமாயினும், இத்தகராற்றில், நான் சிறிதளவேனும் ஐமிச்சத்துக்கு இடமில்லாமல் எதிராளிகளின் கூற்றுக்கள் உண்மையானவையென்றும், வழக்காளிகளின் கூற்றுக்கள் பொய்யென்றும் மனம் நிறைந்தேன்.

நான் முதலாவது விடயத்துக்கு எதிராகவும், இரண்டாவது விடயத்துக்குச் சார்ந்ததும், மூன்றுவது விடயத்துக்கு எதிராகவும் ம்றுமொழி கூறுகிறேன்.

இப்பயனுள்ள மீன்பிடி இடத்தில் வழக்காளிகளால் மீன்பிடிப்பதற்குக் கோரிய தனியுரிமைக் கோரிக்கையானது அவர்களுடைய சுயநலத்தால் ஏற்பட்ட குணமாகும். இந்நாட்களில் மீனவர் மூரல் மீன்களின் விற்பனையால் தொகையான பணத்தைச் சேகரிப்பதாக வாக்குமூலங்களிருக்கின்றன். ஒவ்வொரு மீனவரும் சேகரிக்கும் பணம் ஆயிரக்கணக்காகும். இவ்விடத்துக்கு இயந்திரக் கலங்களை வரவிடாமல் தடுப்பதற்கு வழக்காளிகளால் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், நாடு முன்னேற்றமடைவதற்குப் பதிலாக, பழங் காலத்தில் மாட்டு வண்டிகள் பாவிக்கும் காலத்தை நினைவுபடுத்துகிறதாகும். இந்நாட்டிலும், உலகத்தின் மற்றைய பாகங்களிலும் இயங்கக்கூடிய அளவுக்கு மீன்பிடிப்பதற்காக வள்ளங்களை இயந்திரமயமாக்குவதற்கு உற்சாகமூட்டுகின்றன. இந்நாட்டில், அரசாங்கம் உணவு உற்பத்திப் போரில் முழுமூச்சுடன் இறங்கியிருக்கும் இவ்வேளையில் சுயநலத்திற்காக எந்த ஒரு பகுதியினரையும் தொகையான மீன்களைப் பிடிக்கவிடாது திணைக்களம் தடுக்குமாயின், அது மடைமைக் கொள்கையாகும். இந்நாடு உணவுக்காக அழுகின்றது. எந்த வழியிலேனும் உணவு உற்பத்திக்கெதிராக முடிவு கூறுவேனுகில் நான் நீதி கூறுபவராக இருக்க முடியுமா? காரைநகர் மீனவரின் முறைப்பாடுகள் பொய்யென்று என் முன்னே ருசுப்படுத்தப்பட்டிருக்கிறபடியால், இயந்திரக் கலன்கள் மூலமோ அல்லது இல்லாமலோ, எல்லாப் பிரிவினர்களையும் இவ்விடத்தில் மீன்பிடிப்பதற்கு அனுமதியளிக்குமாறு நான் சிபாரிசு செய்கிறேன். இதன் தொடர்பாக கடலில் எல்லாப் பிரிவினருக்கும் மீன்பிடிப்பதற்கு உரிமை உண்டென்றும் பொதுச் சட்டத்தை நான் மனதில் கவனத்துக்கெடுத்துக்கொள்ள வேண்டும். சில சூழ்நிலைகளைப் பொறுத்தவரையில் கடற்றொழில் அமைச்சரவர்கள் சில காரணங்களையிட்டு மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிரமாணங்களை உண்டாக்கக்கூடும். முழுவதும் சுயநலத்திற்காக, ஒரு சாதியினரின் சில பிரிவுகாரர்களால், தாங்கள் மீன்பிடிக்குமிடங்களிலிருந்து, மற்றவர்களைத் தள்ளி வைப்பதைப் போன்ற இம்மாதிரி வழக்குகளில், அமைச்சரவர்களின் அதிகாரத்துக்குட்பட்டு உண்டாகக்கூடிய இதுபோன்ற பிரமாணங்களை உண்டாக்குதல் கூடாது என நான் எண்ணுகிறேன்.

(ஒப்பம்) ஜே. ஜீ. எல். சுவாரிஸ்,
ஆணையாளர்,
காரைநகர் மீன்பிடித் தகராற்று விசாரணை.

1974 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி இவ்வறிக்கை ஆங்கிலத்தில் சம்பந்தப்பட்ட குழுவினர்களுக்கு முன்னிலையில் வாசிக்கப்பட்டு, கொழும்பு கடற்றொழில் திணைக்களத்தைச் சேர்ந்த தமிழ் மொழிப்பெயர்ப்பாளரால் தமிழில் மொழி பெயர்த்தும் கூறப்பட்டது.

(ஒப்பம்) ஜே. ஜீ. எல். சுவாரிஸ்,
ஆணையாளர்.

4–205—11.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159

---

ச. வ.—பீ. 8/66

### 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டம்

1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டத்தின் 48 (1) ஆம் பிரிவின்கீழ் கப்பற்றொழில், உல்லாசப் பிரயாண அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

டி. பி. விக்கிரமசிங்கா,
கப்பற்றொழில், உல்லாசப் பிரயாணப்
பதில் அமைச்சர்.

கொழும்பு, 20.03.1975.

### கட்டளை

1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டத்தின் 48 (1) ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு, 1966 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆம் தேதிய 14,702 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்டுக் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறுள்ள கட்டளையானது, " பிரயாணமுகவர் " என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

" பிரயாணமுகவர் என்பது இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகட்கு அல்லது வெளிநாடு செல்லுகின்ற இலங்கை வாசிகளுக்கு, கட்டணதிற்காக அல்லது வெகுமதிக்காகப் பின்வரும் சேவைகளுள் அல்லது வசதிகளுள் எதனையாவது அல்லது எல்லாவற்றையும் ஏற்பாடு செய்யும் தனியாள், பங்குடைமை, கம்பனி அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழு எனப் பொருள்படும் :—

(அ) போக்குவரத்துச் சாதனமெதினும் பிரயாணச் சீட்டுக்களை வழங்குதல் அல்லது ஆசனங்களை ஒதுக்குதல் ;

(ஆ) விடுதிகள், வாடிவீடுகள், விருந்தினர் மனைகள் என்பவற்றிலும் உணவும் உறைவிடமும் ஏற்பாடு செய்யும் ஏனைய இடங்களிலும் தங்கும் வசதிகளை ஒதுக்குதல் ;

(இ) இறங்குதுறைகளில் வரவேற்பதற்கும், பிரயாண ஆவணங்களான கடவுச் சீட்டுக்கள், விசாக்கள், செலாவணிக் கட்டுப்பாட்டு அனுமதிச் சீட்டுக்கள் என்பவற்றைப் பெறுவதற்கும், பொதிகளை அகற்றிச் செல்லுவதிலும், இடம் பெயர்ப்பதிலும் உதவுவதற்கு ஏற்பாடு செய்தல் ;

(ஈ) எல்லாவற்றையும் உட்படுத்தும் அடிப்படையில் அல்லது பிரயாணச் சீட்டுக்களின் விற்பனையில் வரும் தரகின் அடிப்படையில் சுற்றுலாக்களை அல்லது உல்லாசப் பிரயாணங்களை ஒழுங்கு செய்தலும், அத்தகைய சுற்றுலாக்களுடன் அல்லது உல்லாசப் பிரயாணங்களுடன் தொடர்புடைய சேவைகளையும் வசதிகளையும் ஏற்பாடு செய்தலும் ".

4-259—11 04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### அறிவித்தல்

1948 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 30 ந் திகதியின் 9,859 இலக்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்களால் திருத்தம் செய்யப்பட்டவாறுன (அத்தியாயம் 187) தேசிய அரும் பொருட் சாலைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 9 ன் கீழ் செய்யப்பட்ட பிரமாணங்களின் 3 வது பிரமாணத்தின் கீழ், கொழும்பு, கண்டி, இரத்தினபுரி தேசிய அரும்பொருட்சாலைகளும், அனுராதபுரக் கிராயமீய, அரும்பொருட்சாலையும் முறையே சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு காரணமாகவும் விசாகப் பெருநாள் காரணமாகவும் முறையே 1975 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 14 ந் திகதியும், மே மாதம் 25 ந் திகதியும் பொதுமக்களுக்குத் திறந்து வைக்கப்பட மாட்டாதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பி. எச். டி. எச். த சில்வா,
தேசிய அரும்பொருட்சாலைகள் அதிபர்.

தேசிய அரும்பொருட்சாலைத் திணைக்களம்,
கொழும்பு-7,
02 ஏப்ரில், 1975.

4–231—11.04.75 ந் திகதியவர்த்தமானி இல. 159

1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டம்

அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்றுக் காரியாதிகாரியின் பிரிவில் மாடு குறிசுடுவதற்குரிய திகதியும் இடமும் 1975

| கி. சே. இல. | கி. சே. பிரிவு | குறிசுடும் திகதி | குறிசுடும் இடம் |
|---|---|---|---|
| 10 | திருக்கோவில் .. | .. 16.5.75 — 23.5.75 | .. திருக்கோவில் கி. மு. ச. |
| | | 30.5.75 — 06.6.75 | .. திருக்கோவில் வளவு |
| | | 13.6.75 — 20.6.75 | .. காஞ்சிரங்குடா கோரக்குறுப்புத் தோட்டம் |
| 11 | 2 ம் குறிச்சி தம்பிலுவில் | .. 13.5.75 — 27.5.75 | .. தம்பிலுவில் 2 ம் குறிச்சி |
| | | 24.6.75 — 27.6.75 | .. ஷை |
| | | 05.7.75 — 17.7.75 | .. பள்ளவெளி வம்மியடி |
| 12 | 1 ம் குறிச்சி தம்பிலுவில் | .. 20.5.75 — 28.6.75 | .. கி. ச. கந்தோர் |
| | | 20.9.75 | |
| 13 | பனங்காடு .. | .. 09.5.75 — 30.6.75 | .. பனங்காடு |
| | | 05.6.75 — 27.6.75 | .. புட்டம்பை பாடசாலை விளையாட்டு மைதானம் கண்ணகிபுர பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கு அண்மையில் |
| 15 | 1 ம் குறிச்சி அக்கரைப்பற்று | .. 15.5.75 — 29.5.75 | .. கி. சே. கந்தோர் |
| | | 05.6.75 — 12.6.75 | .. கி. சே. வளவில் |
| 16/17 | 2/3 ம் குறிச்சி அக்கரைப்பற்று .. | 16.5.75 — 20.6.75<br>18.7.75 — 15.8.75<br>19.9.75 — 17.9.75 | ஓ. வை. எஸ். ஆதம்லெவ்வை வளவு, பிரதான வீதி அக்கரைப்பற்று |
| 18/19 | 4/5 ம் குறிச்சி அக்கரைப்பற்று .. | 05.6.75 — 12.6.75<br>19.6.75 — 26.6.75 | புதுப்பள்ளிக்கண்மையில் அக்கரைப்பற்று |
| 20 | 6 ம் குறிச்சி அக்கரைப்பற்று | .. 06.5.75 — 13.6.75 | .. பட்டியடிப்பிட்டி |
| | | 20.6.75 — 27.6.75 | .. ஷை |
| 21 | 7 ம் குறிச்சி அக்கரைப்பற்று | .. 07.5.75 — 14.6.75 | .. ஆலையடிவேம்பு |
| | | 21.6.75 — 26.6.75 | .. 7 ம் குறிச்சி அக்கரைப்பற்று |
| 22 | 8/9 ம் குறிச்சி அக்கரைப்பற்று | .. 09.5.75 — 30.5.75 | .. கி. சே. கந்தோர் வளவில் |
| | | 05.6.75 — 27.6.75 | .. அக்கரைப்பற்று 8 |
| 23 | கோளாவில் .. | .. 12.5.75 — 27.5.75<br>28.5.75 — 10.6.75 | கோளாவில் விநாயகர் வித்தியாலயத்திற்கு அருகில் |

டவ்ளியு. கே. ஏ. பி. பர்ஸி அபேசிங்க,
அரசாங்க அதிபர்,
அம்பாறை மாவட்டம்.

அரசாங்க அதிபர் அலுவலகம்,
அம்பாறை.

4-254—11.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159.

---

1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டம்

கால்நடைகளுக்குக் குறிசுடல்—நிந்தவூர்பற்று, அம்பாறை மாவட்டம்—1975

(ஆடி மாதம் 1 ம் திகதி தொடக்கம் 31 ம் திகதி வரை)

| கி. சே. இல. | கிராம சேவகர் பிரிவு | குறிசுடும் காலம் | குறிசுடும் இடம் |
|---|---|---|---|
| 37 | 5 ம் குறிச்சி நிந்தவூர் .. .. | .. 01.07.75 — 03.07.75 | .. கிராம சேவகர் காரியாலயம் |
| 38 | 4 ம் குறிச்சி நிந்தவூர் .. .. | .. 04.07.75 — 06.07.75 | .. ஷை |
| 39 | 3 ம் குறிச்சி நிந்தவூர் .. .. | .. 07.07.75 — 09.07.75 | .. ஷை |
| 40 | 2 ம் குறிச்சி நிந்தவூர் .. .. | .. 10.07.75 — 12.07.75 | .. ஷை |
| 41 | 1 ம் குறிச்சி நிந்தவூர் .. .. | .. 13.07.75 — 15.07.75 | .. ஷை |
| 42 | 3 ம் குறிச்சி காரைதீவு .. .. | .. 16.07.75 — 18.07.75 | .. ஷை |
| 43 | மாவடிப்பள்ளி .. .. .. | .. 19.07.75 — 21.07.75 | .. ஷை |
| 44 | 1 ம் குறிச்சி காரைதீவு .. .. | .. 23.07.75 — 25.07.75 | .. ஷை |
| 44அ | மாளிகைக்காடு .. .. .. | .. 26.07.75 — 28.07.75 | .. ஷை |
| 45 | 2 ம் குறிச்சி காரைதீவு .. .. | .. 29 07.75 — 31.07.75 | .. ஷை |

பேசி அபேசிங்க,
அரசாங்க அதிபர்,
அம்பாரை மாவட்டம்.

கச்சேரி, அம்பாரை.

4-253—11.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159.

## 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டம்

### கால்நடைகளுக்குக் குறிசுடல்—கரவாகுப்பற்று, அம்பாறை மாவட்டம்—1958

| கி. சே. இல. | கிராம சேவையாளரின் பிரிவு | குறிசுடும் திகதி | குறிசுடும் இடம் |
|---|---|---|---|
| 47 | சாய்ந்தமருது 6 ம் குறிச்சி | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 1 வது புதன்கிழமை | கி. சே. வின் கந்தோர் |
| 47எ | சாய்ந்தமருது 4/5 ம் குறிச்சி | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 2 வது வியாழக்கிழமை | ௸ |
| 50 | சாய்ந்தமருது 2/3 ம் குறிச்சி | ௸ | ௸ |
| 52 | சாய்ந்தமருது 1 ம் குறிச்சி | ௸ | ௸ |
| 53 | சாய்ந்தமருது தமிழ்க் குறிச்சி | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 1 வது புதன்கிழமை | ௸ |
| 54 | கல்முனைக்குடி 5 ம் குறிச்சி | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 1 வது வியாழக்கிழமை | ௸ |
| 55 | கல்முனைக்குடி 4 ம் குறிச்சி | ௸ | ௸ |
| 56 | கல்முனைக்குடி 2/3 ம் குறிச்சி | ௸ | ௸ |
| 58 | கல்முனைக்குடி 1 ம் குறிச்சி | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 1 வது புதன்கிழமை | ௸ |
| 59 | கல்முனை 3 ம் குறிச்சி | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 2 வது வியாழக்கிழமை | ௸ |
| 61 | கல்முனை 1/2 ம் குறிச்சி | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 1 வது செவ்வாய்க்கிழமை | ௸ |
| 62 | நயப்பட்டிமுனை த. கு. | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 4 வது செவ்வாய்க்கிழமை | ௸ |
| 64 | நாய்ப்பட்டிமுனை மு. கு. | ௸ | ௸ |
| 66 | பாண்டிருப்பு | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 1 வது செவ்வாய்க்கிழமை | ௸ |
| 67 | மருதமுனை 2 ம் குறிச்சி | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 3 வது செவ்வாய்க்கிழமை | ௸ |
| 68 | மருதமுனை 1 ம் குறிச்சி | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 2 வது வியாழக்கிழமை | ௸ |
| 69 | சேனைக்குடியிருப்பு | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 1 வது புதன்கிழமை | ௸ |
| 71 | பெரியநீலாவணை 2 ம் குறிச்சி | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 2 வது செவ்வாய்க்கிழமை | ௸ |
| 72 | பெரியநீலாவணை 1 ம் குறிச்சி | மார்கழி மாதம் தவிர ஒவ்வொரு மாதமும் 1 வது புதன்கிழமை | ௸ |

பேர்சி அபேசிங்க,
அரசாங்க அதிபர்,
அம்பாறை மாவட்டம்.

அம்பாறைக் கச்சேரி.

4-252—11.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** *என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—*குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை 1975**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் | வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 18.4.75 |
| மே .. .. | வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் | வியாழன் | 24.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 23.5.75 |
| யூன் .. .. | வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 20.6.75 |

**ஏல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
***அரசாங்க அழுத்தகர்***

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு.*
*1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது